


**14. 09. 2025**

தலைப்பு செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்

2. சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்களால் அனைத்து தரப்பு மக்களும் பயனடைவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. நவீன தொழில்நுட்பத்தில் அனைத்து இந்திய மொழிகளையும் ஒருங்கிணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

4. முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 562 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய வளர்ச்சித்திட்டப்பணிகளை இன்று தொடங்கிவைத்தார்.

5. துபாயில் நடைபெறும் ஆசியகோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அசாம் மாநிலத்தில் 6 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித்திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசியஅவர், விரைவான போக்குவரத்திற்கான திட்டங்கள் உயர் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படுவதாக கூறினார்.

உலகின் மிக விரைவான வளர்ச்சியடைந்து வரும் பொருளாதார சக்திகளில் இந்தியா ஒன்றாக திகழ்வதை சுட்டிக்காட்டிய பிரதமர், விரைவான வளர்ச்சிக்கு, விரைவான இணைப்பின் அவசியத்தை வலியுறுத்தினார்.

உள்ளூர் தயாரிப்புகளை பயன்படுத்துவதில் பெருமைக் கொள்வதுடன் அவற்றை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் எடுத்துரைத்தார்

வடகிழக்கு மாநிலங்களின் முன்னேற்றத்தில் மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்த பிரதமர், 21-ம் நூற்றாண்டின் அடுத்த கட்டம் உலகளாவிய கிழக்கு, வடகிழக்கு என்ற கொள்கை அடிப்படையில் அமைந்துள்ளதாக கூறினார்.

தொடர்ந்து அசாம் உயிரி எத்தனால் தொழில்நுட்ப சுத்திகரிப்பு ஆலை உள்ளிட்ட 9 ஆயிரத்து 230 கோடி ரூபாய் மதிப்பிலான தொழில்துறை மேம்பாட்டுத் திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

நாட்டின் அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் வரி சீர்த்திருத்தங்கள் கொண்டுவர பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அடுத்த தலைமுறைக்கான சரக்கு சேவைவரி சீர்த்திருத்தங்கள் வரும் 22-ம் தேதி நடைமுறைக்கு வரவுள்ள நிலையில், சென்னையில் இதுதொடர்பாக இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசியஅவர், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 2 அடுக்கு வரி கட்டமைப்பு மிகப்பெரிய சாதனை என்றார்.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அனைத்து பொருட்களுக்கும் வரிச்சலுகைகள் வழங்கப்பட்டு உள்ளதாக கூறிய நிதியமைச்சர், பல்வேறு பொருட்கள் மீதான வரி முற்றிலும் விலக்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

அடுத்த தலைமுறைக்கான சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் தங்களுக்கு பெரிதும் பயனளிப்பதாக நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**ஹிந்தி திவஸ்**

சர்வதேச அளவில் ஹிந்தி மொழிக்கு அதிகரித்து வரும் அங்கீகாரம் நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஹிந்தி மொழி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியில், மக்கள் தொடர்பு ஊடகமாக மட்டுமின்றி பாரம்பரிய கலாச்சாரத்தின் அடையாளமாக ஹிந்தி மொழி விளங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து இந்திய மொழிகளையும் வளப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு கொண்டுசேர்ப்பதற்கு அனைவரும் உறுதியேற்க வேண்டுமென்று பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நாளையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டில் மின்னணு நிர்வாகம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்தில் அனைத்து இந்திய மொழிகளையும் ஒருங்கிணைக்க அரசுநடவடிக்கை எடுத்துவருவதாக கூறினார்.

அனைத்து இந்திய மொழிகளையும் ஒருங்கிணைக்கும் பாலமாக ஹிந்தி மொழி விளங்குவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

1949-ம் ஆண்டு இதேநாளில் ஹிந்தியை அதிகாரப்பூர்வ மொழியாக அரசியலமைப்பு நிர்ணயசபை ஏற்றுக் கொண்டதை நினைவுக்கூறும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**ஓம்பிர்லா**

நாடாளுமன்ற சட்டமன்றங்களில் மகளிர் மேம்பாடு தொடர்பான 2 நாள் தேசிய மாநாட்டை மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா திருப்பதியில் இன்று தொடங்கிவைக்கிறார்.

தொழில்நுட்பம் சார்ந்த மகளிர் ஆளுமையை மேம்படுத்துதல் தொடர்பான அம்சங்கள் குறித்து இதில் விவரிவாக விவாதிக்கப்படும்.

❖❖❖❖❖❖❖

**ஆயுஷ்**

மகளிர் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்விற்கான 16 நாள் தேசிய இயக்கத்தை மத்திய ஆயுஷ் அமைச்சகம் இன்று தொடங்கியுள்ளது.

ஆயுர்வேதம், யோகா சார்ந்த வாழ்க்கை முறைகள் மற்றும் பயிற்சிகளால் மகளிர் உடல் நலன் மற்றும் மனநலத்தை பேணிகாப்பது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் கொண்டுசெல்லும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆயுஷ் ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அதுசார்ந்த தொழில்துறையினரின் பங்களிப்புடன், புற்றுநோய், ரத்தசோகை, காசநோய் உள்ளிட்ட நோய்களை கண்டறிவதற்கான மருத்துவ முகாம்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வீட்டில் தயாரிக்கப்படும் ஊட்டச்சத்து நிறைந்த உணவு வகைகளுடன் மூலிகை மருத்துவ தாவரங்கள் பயன்பாடு குறித்தும் இந்த 16 நாள் இயக்கத்தில் எடுத்துரைக்கப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

மாநில அரசு தேர்தல் வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரியில் இன்று 562 கோடி ரூபாய் மதிப்பிலான ஆயிரத்து 114 புதிய திட்டப்பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசியஅவர், இம்மாவட்டத்தின் அஞ்சட்டியை தலைமை இடமாக கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் உள்ளிட்ட 5 அறிவிப்புகளை வெளியிட்டார்.

.. வாய்ஸ் ..

மேலும் 270 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் 85 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனை பட்டா உள்ளிட்ட 2 ஆயிரத்து 885 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் பயனாளிகளுக்கு முதலமைச்சர் வழங்கினார்.

தொடர்ந்து மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டங்களின் தற்போதைய நிலை குறித்த களஆய்வையும் முதலமைச்சர் மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகை கோரி புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு இன்னும் ஓரிரு மாதங்களில் தொகைவழங்கப்படும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இன்று நடைபெற்ற இலவச திருமண நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், இதுவரை ஒருகோடியே 15 லட்சம் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

பள்ளி குழந்தைகளுக்கான காலை உணவு திட்டத்தின் மூலம் மாநிலத்தில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பயனடைந்து வருவதாக கூறினார்.

பெரம்பலூர் மாவட்டம் சிறுவாச்சூர் அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோவிலில் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மிருணாளினி, 5 இணையருக்கு இலவச திருமணம் செய்துவைத்தார்.

❖❖❖❖❖❖❖

## அனிதா ராதாகிருஷ்ணன்

தமிழகத்தில் அனைத்து தரப்புமக்களுக்கும் தேவையான நலத்திட்டங்களை அரசு நிறைவேற்றி வருவதாக மாநில மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், திமுக தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதை சுட்டிக்காட்டினார்.

தமிழக வெற்றிக்கழக தலைவர் திரு.விஜய் மக்கள் நலனிற்கான தனது திட்டங்கள் குறித்து தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

## அன்பில் மகேஷ்

திருச்சி மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழகத்திற்கான நிதிவிடுவிப்பில் மத்திய அரசு நெருக்கடி கொடுத்து வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

## அண்ணா பிறந்தநாள்

பேரறிஞர் அண்ணாவின் 117-வது பிறந்தநாள் நாளை கொண்டாடப்படுவதை சென்னை அண்ணா சாலையில் உள்ள

அன்னாரது திருவுருவச்சிலைக்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

இருவரி

**TNPSC** குரூப்-2 தேர்வுகள் வரும் 28-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த வேலைநாடுனர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செயல்படும் மெய்நிகர் கற்றல் இணைய தளத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கட்டுமானதொழிலாளர் நல வாரிய உறுப்பினராக இருந்த மூத்த குடிமக்கள் தங்குவதற்கான முதியோர் இல்லங்களை பராமரிப்பதற்கு அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்விமோகன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீயணைப்பு, பேரிடர் மேலாண்மை, வருவாய் உள்ளிட்ட துறையினர் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் அறிவுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

தேனி வாய்ஸ்

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே பாரம்பரிய இரட்டை மாட்டுவண்டி பந்தயம் இன்று நடைபெற்றது.

மார்க்கையன் கோட்டையிலிருந்து சங்கராபுரம் வரை 8 கிலோ மீட்டர் தூரம் தட்டான்சிட்டு, தேன்சிட்டு, நடுமாடு, உள்ளிட்ட 7 பிரிவுகளில் நடைபெற்ற இந்த போட்டியில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட ஜோடி மாடுகள் பங்கேற்றன.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

துபாயில் நடைபெறும் 17-வது ஆசியகோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் குரூப் - A பிரிவில் இந்தியா இன்றிரவு பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஹாங்காங் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் லக்ஷயாசென் - சீனாவின் **Shi Feng Li** யுடன் இன்று மோதுகிறார்.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖